# அலகு - 20
# இனக்கலப்பு மற்றும் உயிரித்தொழில்நுட்பவியல்



## I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. ஓர் அனுபவமற்ற விவசாயி பயிர் மேம்பாட்டிற்காக எந்த முறையைப் பின்பற்றுவார்?
   அ) போத்துத் தேர்வு முறை **ஆ) கூட்டுத் தேர்வு முறை**
   இ) தூய வரிசைத் தேர்வு முறை ஈ) கலப்பினமாக்கம்

2. பூசா கோமல் என்பது __________ இன் நோய் எதிர்ப்புத்திறன் பெற்ற ரகம் ஆகும். **[SEP– 2021]**
   அ) கரும்பு ஆ) நெல் **இ) தட்டைப்பயிறு** ஈ) மக்காச்சோளம்

3. கலப்பினமாக்கம் மற்றும் தேர்வு செய்தல் மூலமாக உருவாக்கப்பட்ட, துரு நோய்க்கு எதிர்ப்புத் தன்மை பெற்ற ஹிம்கிரி என்பது ________ இன் ரகமாகும். **[MAY - 2022]**
   அ) மிளகாய் ஆ) மக்காச்சோளம் இ) கரும்பு **ஈ) கோதுமை**

4. தன்னுடைய 50 வது பிறந்த நாளைக் கொண்டாடிய, மில்லியன் மக்களின் உயிரைக் காப்பாற்றிய அதிசய அரிசி _________ ஆகும்.
   **அ) IR 8** ஆ) IR 24 இ) அட்டாமிட்டா 2 ஈ) பொன்னி

5. உயிர்த்தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட பின்வரும் எப்பொருள் மனிதனுக்குப் பயன்படும் பொருள்களை உற்பத்தி செய்யப் பயன்படுகிறது?
   அ) உயிரினங்களிடமிருந்து பெறப்பட்ட நொதி ஆ) வாழும் உயிரினங்கள்
   இ) வைட்டமின்கள் **ஈ) (அ) மற்றும் (ஆ)**

6. DNAவை வெட்டப் பயன்படும் நொதி **[SEP – 2020, PTA – 2]**
   அ) கத்திரிக்கோல் **ஆ) ரெஸ்ட்ரிக்ஸன் எண்டோநியூக்ளியேஸ்**
   இ) கத்தி ஈ) RNA நொதிகள்

7. rDNA என்பது __________.
   அ) ஊர்தி DNA ஆ) வட்ட வடிவ DNA
   **இ) ஊர்தி DNA மற்றும் விரும்பத் தக்க DNAவின் சேர்க்கை** ஈ) சாட்டிலைட் DNA

8. DNA விரல்ரேகை தொழில்நுட்பம் __________ DNA வரிசையை அடையாளம் காணும் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டது. **[PTA – 5]**
   அ) ஓரிழை ஆ) திடீர் மாற்றமுற்ற
   இ) பல்லுருத்தோற்ற **ஈ) மீண்டும் மீண்டும் வரும் தொடர்**

9. மாற்றம் செய்யப்பட்ட உள்ளார்ந்த அல்லது அயல் ஜீனைப் பெற்ற உயிரினங்கள் ________ என அழைக்கப்படுகின்றன.
   அ) அயல் ஜீனைப் பெற்ற உயிரினங்கள் ஆ) மரபுப் பண்பு மாற்றம் செய்யப்பட்டவை
   இ) திடீர் மாற்றம் அடைந்தவை **ஈ) அ மற்றும் ஆ**

10. ஹெக்சாபிளாய்டி கோதுமையில் $(2n = 6x = 42)$ ஒற்றைமயம் (n) மற்றும் அடிப்படைத் தொகுதி (x) குரோமோசோம் எண்ணிக்கை முறையே __________ ஆகும்.
    அ) $n = 7$ மற்றும் $x = 21$ ஆ) $n = 21$ மற்றும் $x = 21$
    இ) $n = 7$ மற்றும் $x = 7$ **ஈ) $n = 21$ மற்றும் $x = 7$**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ***தாவர பயிர்ப் பெருக்கம்*** என்பது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த உயர்ந்த தரமுடைய தாவரங்களை உற்பத்திச் செய்யும் கலை ஆகும்.
2. புரதம் செறிந்த கோதுமை ரகம் ***அட்லஸ் 66*** ஆகும்.
3. ***கால்ச்சிசின்*** என்பது குரோமோசோம் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க பயன்படுத்தப்படும் வேதிப்பொருள் ஆகும்.
4. விரும்பத்தக்க ஊட்டசத்து நிறைந்த பயிர்த் தாவரங்களை உற்பத்தி செய்யும் அறிவியல் முறை ***உயிரூட்டச் சத்தேற்றம்*** எனப்படும்.
5. நெல் பொதுவாக வண்டல் மண்ணில் செழித்து வளர்கிறது. ஆனால் சடுதி மாற்றத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட ***அட்டாமிட்டா 2*** என்ற நெல் ரகம் உவர் தன்மை வாய்ந்த மண்ணிலும் செழித்து வளரும். **[SEP – 2021]**
6. ***மரபுப்பொறியியல் (அல்லது) மறுசேர்க்கை டி.என்.ஏ*** தொழில்நுட்பம் மரபியல் ரீதியாக உயிரினங்களை உற்பத்திச் செய்ய வழிவகை செய்துள்ளது.
7. ரெஸ்ட்ரிக்ஸன் எண்டோநியூக்ளியேஸ் நொதியானது DNA மூலக்கூறை ***பேலின்ட்ரோம் கார வரிசை (பாஸ்போடைஎஸ்டர் பிணைப்பு)*** என்று அழைக்கப்படும் குறிப்பிட்ட இடங்களில் துண்டாக்குகிறது.
8. ஒத்த DNA விரல்ரேகை அமைப்பு ***ஒற்றைக்கரு இரட்டையர்கள்*** இடையே காணப்படும்.
9. வேறுபாடு அடையாத செல்களின் தொகுப்பு ***குருத்தணுக்கள்*** ஆகும்.
10. ஜீன் குளோனிங் முறையில் விரும்பிய DNA, ***தகுந்த கடத்தி (பிளாஸ்மிட்)*** உடன் ஒருங்கிணைக்கப்படுகிறது.

## III. சரியா அல்லது தவறா என கூறுக. தவறாயின், சரியான கூற்றை எழுதுக.

1. கால்ச்சிசின் சிகிச்சையால் உருவாக்கப்பட்ட ரப்பனோ பிராசிக்கா என்பது மனிதன் உருவாக்கிய ஒரு அல்லோடெட்ராபிளாய்டு ஆகும். **[சரி]**
2. இரண்டுக்கும் மேற்பட்ட தொகுதி குரோமோசோம்களைக் கொண்ட உயிரினங்களை உருவாக்கும் முறை சடுதிமாற்றம் எனப்படும். **[தவறு]**

   **இரண்டுக்கும் மேற்பட்ட தொகுதி குரோமோசோம்களைக் கொண்ட உயிரினங்களை உருவாக்கும் முறை* ***பன்மய பயிர்ப்பெருக்கம்*** *எனப்படும்.*
3. உடல இனப்பெருக்கம் அல்லது பாலிலா இனப்பெருக்கத்தின் மூலம் ஒரு தனித் தாவரத்தில் இருந்து உருவாக்கப்பட்ட தாவரங்களின் கூட்டமே தூய வரிசை எனப்படும். **[தவறு]**

   **உடல இனப்பெருக்கம் அல்லது பாலிலா இனப்பெருக்கத்தின் மூலம் ஒரு தனித் தாவரத்தில் இருந்து உருவாக்கப்பட்ட தாவரங்களின் கூட்டமே* ***குளோன்கள்*** *எனப்படும்.*
4. இரும்பு சத்து செறிவூட்டப்பட்ட அரிசி ரகம், பயிர் செய்யப்பட்ட தாவரத்தின் புரதத் தரத்தை தீர்மானிக்கிறது. **[தவறு]**

   **இரும்பு சத்து செறிவூட்டப்பட்ட அரிசி ரகம், பயிர் செய்யப்பட்ட தாவரத்தின்* ***இரும்புத்*** *தரத்தை தீர்மானிக்கிறது.*
5. 'கோல்டன் ரைஸ்' ஒரு கலப்புயிரி. **[தவறு]**

   **கோல்டன் ரைஸ் ஒரு* ***மரபணு மாற்றம் செய்யப்பட்ட அரிசி.***
6. பாக்டீரியாவின் Bt ஜீன், பூச்சிகளைக் கொல்லக் கூடியது. **[சரி]**
7. செயற்கைக் கருவுறுதல் என்பது உடலுக்குள் நடைபெறும் கருவுறுதலாகும். **[தவறு]**

   **செயற்கைக் கருவுறுதல் என்பது* ***உடலுக்கு வெளியே*** *நடைபெறும் கருவுறுதலாகும்.*
8. DNA விரல் ரேகை தொழில் நுட்பம் அலெக் ஜெ.ஃப்ரே என்பவரால் உருவாக்கப்பட்டது. **[சரி]**
9. மூலக்கூறு கத்தரிக்கோல் என்பது DNA லைகேஸைக் குறிக்கும். **[தவறு]**

   **மூலக்கூறு கத்திரிக்கோல் என்பது* ***ரெஸ்ட்ரிக்ஸன் நொதிகளை*** *குறிக்கும்.*

## IV. பொருத்துக.

| கலம் – I | கலம் – II | விடைகள் |
|---|---|---|
| 1) சோனாலிகா | பேசியோலஸ் முங்கோ | 1) அரைக்குள்ள கோதுமை |
| 2) IR 8 | கரும்பு | 2) அரைக்குள்ள அரிசி |
| 3) சக்காரம் | அரைக்குள்ள கோதுமை | 3) கரும்பு |
| 4) முங் நம்பர் 1 | வேர்க்கடலை | 4) பேசியோலஸ் முங்கோ |
| 5) TMV – 2 | அரைக்குள்ள அரிசி | 5) வேர்க்கடலை |
| 6) இன்சுலின் | பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் | 6) rDNA தொழில்நுட்பத்தில் உருவான முதல் ஹார்மோன் |
| 7) Bt நச்சு | பீட்டா கரோட்டின் | 7) பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் |
| 8) கோல்டன் ரைஸ் | rDNA தொழில் நுட்பத்தில் உருவான முதல் ஹார்மோன் | 8) பீட்டா கரோட்டின் |

## V. கூற்று மற்றும் காரணம் வகை கேள்விகள்

**பின்வரும் ஒவ்வொரு வினாக்களிலும் ஒரு கூற்றும் அதன் கீழே அதற்கான காரணமும் கொடுக்கப்பட்டுள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள நான்கு வாக்கியங்களில் ஒன்றை சரியான பதிலாக குறிக்கவும்.**

அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஆ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

1. **கூற்று** : கலப்புயிரி இரு பெற்றோரையும் விட மேம்பட்டதாக இருக்கும்.
**காரணம்** : கலப்பின வீரியம் தற்கலப்பில் இழக்கப்படுகிறது.

**விடை : (அ)** **கூற்று சரி ஆனால் காரணம் தவறு.**

2. **கூற்று** : கால்ச்சிசின் குரோமோசோம் எண்ணிக்கையைக் குறைக்கிறது. **[PTA – 3]**
**காரணம்** : சகோதரி குரோமோட்டிடுகள் எதிரெதிர்த் துருவங்களை நோக்கி நகர்வதை அது ஊக்குவிக்கிறது.

**விடை : (ஈ)** **கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.**

3. **கூற்று** : rDNA தொழில்நுட்பம் கலப்பினமாக்கலை விட மேன்மையானது. **[PTA – 4]**
**காரணம்** : இலக்கு உயிரினத்தில் விரும்பத்தகாத ஜீன்களை நுழைக்காமல் விரும்பத்தக்க ஜீன்கள் மட்டும் நுழைக்கப்படுகின்றன.

**விடை : (இ)** **கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.**

## VI. ஒரே வாக்கியத்தில் விடையளி

1. **அதிக நார்ச்சத்தும், புரதமும் நிறைந்த கோதுமை ரகத்தின் பெயரை எழுதுக.**
டிரிட்டிக்கேல்.

2. **நெல்லில் அரைக்குள்ள வகைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இது நெல்லில் காணப்படும் குள்ள மரபணுவால் (ஜீனால்) சாத்தியமானது. இந்த குள்ள மரபணுவின் (ஜீன்) பெயரை எழுதுக.**
டீ-ஜியோ-வூ-ஜென் (DGWG).

3. **மரபுப் பொறியியல் - வரையறு.**
ஜீன்களை நாம் விரும்பிய படி கையாள்வதும், புதிய உயிர்களை உருவாக்க, ஜீன்களை ஒரு உயிரியிலிருந்து மற்றொரு உயிரிக்கு இடம் மாற்றுதலும் மரபுப் பொறியியல் எனப்படும்.

**4. குருத்தணுக்களின் வகைகளை எழுதுக.** **[PTA – 2]**

i) கருநிலைக் குருத்தணுக்கள் ii) முதிர் / உடலக் குருத்தணுக்கள்

**5. அயல் ஜீனைப் பெற்ற உயிரினங்கள் என்றால் என்ன?** **[PTA – 6]**

மரபுப் பண்பு மாற்றப்பட்ட ஜீனைப் பெற்ற தாவரம்/விலங்குகள் மரபுப் பண்பு மாற்றப்பட்ட உயிரிகள் அல்லது அயல் ஜீனைப் பெற்ற உயிரினங்கள் எனப்படும்.

## VII. சுருக்கமாக விடையளி

**1. நோய் எதிர்ப்புத் திறனுக்கான பயிர் பெருக்கம் பற்றி விவரி.** **[PTA – 6]**

நோய் எதிர்ப்புத் திறனுக்கான தாவர பயிர் பெருக்கமானது,

- ❖ விளைச்சலை அதிகரிப்பது.
- ❖ பூஞ்சைக் கொல்லி மற்றும் பாக்டீரிய கொல்லிகளைக் குறைவாகப் பயன்படுத்துவது.
- ❖ நோய் எதிர்ப்புத்திறன் பெற்ற பயிர்களை உற்பத்தி செய்வது.

| நோய் எதிர்ப்புத் திறன் பெற்ற பயிர் ரகங்களின் எடுத்துக்காட்டுகள் | | |
|---|---|---|
| **பயிர்** | **ரகம்** | **நோய் எதிர்ப்புத் திறன்** |
| கோதுமை | *ஹிம்கிரி* | இலை மற்றும் பட்டைத் துரு நோய், ஹில் பண்ட் |
| காலி∴பிளவர் | *பூசா சுப்ரா, பூசா பனிப்பந்து K-1* | கருப்பு அழுகல் நோய் |
| தட்டைப்பயிறு | *பூசா கோமல்* | பாக்டீரிய கருகல் நோய் |

**2. இந்தியா உணவு உற்பத்தியில் சாதிக்க உதவிய கோதுமையின் மூன்று மேம்பாடு அடைந்த பண்புகளை எழுதுக.** **[PTA – 4]**

i) **அதிக மகசூல் தரும் அரைக்குள்ள வகை -** சோனாலிகா, கல்யாண் சோனா

ii) **நோய் எதிர்ப்புத் திறன்** - ஹிம்கிரி

iii) **மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து தரம்** - அட்லஸ் 66

**3. லைசின் அமினோ அமிலம் செறிந்த இரண்டு மக்காச்சோள கலப்புயிரி வகைகளின் பெயரை எழுதுக.**

புரோட்டினா, சக்தி, ரத்னா. **[MAY - 2022, MDL – 19]**

**4. வேறுபடுத்துக.**

**அ) உடல செல் ஜீன் சிகிச்சை மற்றும் இன செல் ஜீன் சிகிச்சை** **[SEP – 2021, PTA – 1]**

| உடல செல் ஜீன் சிக்ச்சை | இன செல் ஜீன் சிக்ச்சை |
|---|---|
| 1. இது உடல செல்களில் திருத்தப்பட்ட ஜீன்கள் இடம் மாற்றப்படுதல். | 1. இது கருநிலை (அ) இனப்பெருக்க செல்களில் திருத்தப்பட்ட ஜீன்கள் இடம் மாற்றப்படுதல். |
| 2. ஜீன் திருத்தம் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படுவதில்லை. | 2. ஜீன் திருத்தம் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. |

**ஆ) மாறுபாடு அடையாத செல்கள் மற்றும் மாறுபட்ட செல்கள்**

| மாறுபாடு அடையாத செல்கள் | மாறுபட்ட செல்கள் |
|---|---|
| 1. மாறுபாடு அடையாத செல்கள் சிறப்புத்தன்மை அற்றவை. | 1. மாறுபட்ட செல்கள் சிறப்புத் தன்மை வாய்ந்தவை. |
| 2. மாறுபாடு அடையாத செல்கள் தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்ளும். | 2. மாறுபட்ட செல்கள் உடலில் குறிப்பிட்ட பணிகளைச் செய்யும். |
| 3. **எ.கா :** குருத்தணு செல்கள் | 3. **எ.கா:** நரம்பு செல்கள் |

**5. DNA விரல் ரேகைத் தொழில்நுட்பத்தின் நடைமுறை பயன்பாடுகளை எழுதுக. [SEP–2020, PTA–3]**

❖ இது தடயவியலில் குற்றவாளிகளை அடையாளம் காணப் பயன்படுகிறது.

❖ இது ஒரு குழந்தையின் தந்தையை அடையாளம் காணப் பயன்படுகிறது.

❖ இது மரபியல் வேறுபாடுகள், பரிணாமம் மற்றும் இனமாதல் ஆகியவற்றை அறிய உதவுகிறது.

**6. குருத்தணுக்கள் எவ்வாறு புதுப்பித்தல் செயல்பாட்டிற்கு பயன்படுகின்றன?**

உடலின் செல்கள், திசுக்கள் மற்றும் உறுப்புகள் ஜீன் கோளாறு, நோய் அல்லது விபத்து காரணமாக சேதமடையும்போது அவற்றை சரிசெய்து, புதுப்பிக்க குருத்தணு சிகிச்சை பயன்படுகிறது.
**எ.கா:** நரம்புச் சிதைவு குறைபாடுகளை குணப்படுத்த நரம்புக் குருத்தணுக்கள் பயன்படுகிறது.

**7. உட்கலப்பு மற்றும் வெளிக்கலப்பு – வேறுபடுத்துக.**

| வெளிக்கலப்பு | உட்கலப்பு |
|---|---|
| 1. இது தொடர்பற்ற விலங்குகளைக் கலப்புச் செய்வது. | இது நெருங்கிய தொடர்புடைய மற்றும் ஒரே இனத்தை சார்ந்த உயிரினங்களை கலப்பு செய்வது. |
| 2. கலப்புயிரி பலம் வாய்ந்ததாகவும், வீரியமானதாகவும் இருக்கும். | வீரியமிக்க ஜீன்கள் கலப்பினத்தில் ஒன்றாக கொண்டுவரப்பட்டு, விரும்பத்தகாத ஜீன்கள் நீக்கப்படும். |
| 3. ***எ.கா:*** கோவேறு கழுதை | ***எ.கா :*** ஹிஸ்ஸர்டேல் செம்மறி ஆடு |

## VIII. விரிவாக விடையளி

**1. விலங்குகளில் கலப்பின வீரியத்தின் விளைவுகள் யாவை? [PTA – 1, 5]**

**கலப்பின வீரியம் (அ) ஹெட்டிரோசிஸ் :** உயர்தரப் பண்புகளை உடைய கலப்பினங்களை உற்பத்தி செய்தல்.
**விலங்குகளில் கலப்பின வீரியத்தின் விளைவுகள் :**

❖ கால்நடைகளில் பால் உற்பத்தியை அதிகரித்தல்.

❖ கோழிகளில் முட்டை உற்பத்தியை அதிகரித்தல்.

❖ உயர்தர இறைச்சியை உற்பத்தி செய்தல்.

❖ வீட்டு விலங்குகளின் வளர் வீதத்தை அதிகப்படுத்துதல்.

**2. சடுதிமாற்றத்தை எடுத்துக்காட்டுடன் விவரி.**

❖ ஒரு உயிரினத்தின் DNAவின் நியூக்ளியோடைடு வரிசையில் திடீரென ஏற்படும், பாரம்பரியத்துக்கு உட்படும் மாற்றமே **சடுதி மாற்றம்** எனப்படும்.

**எடுத்துக்காட்டுகள் :**

- **சர்பதி ஸொனாரா:** ஸொனாரா-64 கோதுமையில் γ-கதிர்கள், பயன்படுத்தி உருவாக்கப்பட்டது.
- **அட்டாமிட்டா 2:** உவர் தன்மையைத் தாங்கும் திறன், தீங்குயிரி எதிர்ப்புத் தன்மை பெற்றது.
- கடினமான கனி உறை கொண்ட நிலக்கடலை.

❖ **சடுதிமாற்ற பயிர்ப்பெருக்கம்**: பயிர் மேம்பாட்டிற்கு தூண்டப்பட்ட சடுதி மாற்றம்.

❖ சடுதிமாற்றத்துக்கு உட்படும் உயிரினம் **சடுதிமாற்றமுற்ற உயிரினம்** (mutant) எனப்படும்.

❖ சடுதிமாற்றத்தைத் தூண்டும் காரணிகள் **மியூடாஜென்கள்** எனப்படும். இது இரு வகைப்படும்,

***i) இயற்பியல் சடுதிமாற்றத் தூண்டிகள்:*** X, α, β, γ-கதிர்கள்.

***ii) வேதியியல் சடுதிமாற்றத் தூண்டிகள்:*** நைட்ரஸ் அமிலம்.

WAY TO SUCCESS

**3. உயிரூட்டச் சத்தேற்றம் பற்றி சிறு குறிப்பு வரைக.**

**உயிரூட்டச்சத்தேற்றம்:**

இது விரும்பத்தக்க ஊட்டச்சத்துக்களான வைட்டமின்கள், புரதங்கள் மற்றும் கனிமங்கள் நிறைந்த பயிர் தாவரங்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் அறிவியல் முறை.

**எ.கா:**
- லைசின்*(அமினோ அமிலம்)* செறிந்த கலப்பின மக்காச்சோளம் - புரோட்டினா, சக்தி, ரத்னா.
- புரதம் செறிந்த கோதுமை - அட்லஸ் 66.
- இரும்புச் சத்து செறிவூட்டப்பட்ட அரிசி.
- வைட்டமின் A செறிந்த கேரட், பூசணி மற்றும் கீரை.

**4. ஜீன் குளோனிங் தொழில்நுட்பத்தைப் படத்துடன் விவரி.**

**ஜீன் குளோனிங் :**

- ஒரு ஜீன் / டி.என்.ஏ துண்டானது பாக்டீரிய செல்லினுள் செலுத்தப்பட்டு, பாக்டீரிய செல் பகுப்படையும்போது அதனுடன், உட்செலுத்தப்பட்ட டி.என்.ஏ துண்டும் நகல் பெருக்கம் அடைவதாகும்.
- குளோனிங் என்பது மரபொத்த உயிரிகளை பிரதிகளாக உற்பத்தி செய்யும் முறையாகும்.

**ஜீன் குளோனிங் செயல் நுட்பத்தின் அடிப்படை நிகழ்வுகள் :**

- ரெஸ்ட்ரிக்ஸன் நொதியைப் பயன்படுத்தி விரும்பிய டி.என்.ஏ துண்டைப் பிரித்தெடுத்தல்.
- டி.என்.ஏ துண்டைத் தகுந்த கடத்தியினுள் (பிளாஸ்மிட்) நுழைத்து மறுசேர்க்கை டி.என்.ஏக்களை (rDNA) உருவாக்குதல்.
- விருந்தோம்பி பாக்டீரிய செல்லின் உள்ளே மறுசேர்க்கை டி.என்.ஏ-வை உட்புகுத்துதல் (உருமாற்றம்).
- உருமாற்றமடைந்த விருந்தோம்பி செல்களைத் தேர்ந்தெடுத்து மறுசேர்க்கை டி.என்.ஏ (rDNA)வை பாக்டீரிய செல் பெருக்கம் மூலம் நகல் பெருக்கம் செய்தல்.
- விருந்தோம்பியின் செல்லில் புதிய ஜீன் தனது பண்புகளை வெளிப்படுத்துதல்.




**5. மருத்துவத் துறையில் உயிரதொழில்நுட்பவியலின் முக்கியத்துவத்தை எழுதுக.[MAY-2022, SEP-2021]**

உயிர்த் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த மதிப்புமிக்க புரதங்கள் (அ) பாலிபெப்டைடுகள் உருவாக்கப்பட்டு நோய்களுக்கு மருந்துப் பொருட்களை வணிக ரீதியாக உற்பத்தி செய்ய பயன்படுகின்றன.

**rDNA தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள மருத்துவப் பொருள்கள் :**

- இன்சுலின் - இரத்த சர்க்கரை நோய் சிகிச்சை.
- மனித வளர்ச்சி ஹார்மோன் - குழந்தைகளின் வளர்ச்சி குறைபாட்டினை நீக்கும்.
- இரத்தம் உறைதல் காரணிகள் - ஹீமோ.்.பிலியா சிகிச்சை.
- திசு பிளாஸ்மினோஜன் தூண்டி - இரத்தக் கட்டிகளைக் கரைத்து இதய அடைப்பைத் தவிர்க்கிறது.
- ஹெப்பாடிடிஸ் B மற்றும் வெறி நாய்க்கடி(ரேபிஸ்) நோய்களுக்கான தடுப்பூசிகள்.

## IX. உயர் சிந்தனைக்கான வினாக்கள்

**1. பயிர் ரகங்களை பெருக்குபவர் ஒருவர் விரும்பத் தக்கப் பண்புகளை தாவரப் பயிரில் இணைத்துக் கொள்ள விரும்புகிறார். அவர் இணைத்துக் கொள்ளும் பண்புகளின் பட்டியலைத் தயார் செய்.**

- ❖ அதிக மகசூல் மற்றும் உயர்ந்த தரம்
- ❖ நோய் எதிர்ப்புத்திறன்.
- ❖ பூச்சிகள்/தீங்குயிரிகள் எதிர்ப்புத்திறன்.
- ❖ மேம்பட்ட ஊட்டச்சத்து தரம்
- ❖ குறுகிய கால சாகுபடி
- ❖ அரைக்குள்ள வகைகள்

**2. 'இயற்கை விவசாயம் பசுமைப்புரட்சியை விட சிறந்தது' காரணங்கள் கூறு.**

**<u>பசுமைப்புரட்சியை விட இயற்கை விவசாயம் சிறந்தது என்பதற்கான காரணங்கள் :</u>**

- ❖ பசுமைப்புரட்சியில் நச்சுத்தன்மையுள்ள, மாசு ஏற்படுத்தும் பூச்சிக்கொல்லிகள் மற்றும் உரங்களைப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இயற்கை விவசாயம் நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற சத்துக்களை மண்ணுக்கு சேர்க்கிறது.
- ❖ இயற்கை விவசாயத்தில்,
  - ✓ சரியான மண் மேலாண்மை செய்யப்படுகிறது.
  - ✓ இது புவி வெப்பமடைதலின் காரணி ஆகாது.
  - ✓ இது மிகவும் மலிவானது.
  - ✓ உணவு சங்கிலி பாதுகாக்கப்படுகிறது.

எனவே. இயற்கை விவசாயம் பசுமைப்புரட்சியை விட பாதுகாப்பானது, ஆரோக்கியமானது மற்றும் சுற்றுச்சூழலுக்கு சிறந்தது.

**3. "பன்மயம் இராட்சதத் தன்மையை பண்பாகக் கொண்டது" இக்கூற்றை சரியான காரணத்துடன் விவரி.**

- ❖ பன்மயத்தில் குரோமோசோம் எண்ணிக்கை அதிகரிப்பதால், செல்களின் உருவம் பெரிதாகிறது.
- ❖ இதனால் பெரிய தண்டு, இலைகள், பூக்கள் மற்றும் கனிகள் உருவாகின்றன.
- ❖ எனவே, பன்மயம் இராட்சதத் தன்மையை பண்பாகக் கொண்டது.

**4. P என்ற ஜீன் வைட்டமின் A உற்பத்திக்குத் தேவைப்படுகிறது. இது 'R' என்ற மரபுப்பண்பு மாற்றப்பட்ட தாவரத்தை உற்பத்திச் செய்ய 'Q' வின் ஜீனோமுடன் இணைக்கப்படுகிறது.**

**அ) P, Q மற்றும் R என்பன யாவை?**

**P → பீட்டா கரோட்டின்**
**Q → சாதாரண அரிசி ரகம்**
**R → கோல்டன் அரிசி**

**ஆ) இந்தியாவில் Rன் முக்கியத்துவத்தை எழுதுக.**

இந்தியாவில் வைட்டமின் ஏ குறைபாட்டை கோல்டன் அரிசியைப் பயன்படுத்தி தடுக்கலாம்.



WAY TO SUCCESS